**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்கும் - 2023**

-------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இயலுமான வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமல்லாத தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி மீளாய்வாண்டில் ரூபா 1,177,880,000 தொகைக்கு மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | ஆணைக்குழு அமைந்துள்ள காணி மீளமதிப்புச் செய்யப்பட்டுள்ளது என நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 4.1 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி ஆணைக்குழுவிற்குச் சொந்தமானது அல்ல என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வருமானமாக அடையாளம் காணப்பட்ட அறவிட முடியாக் கடனின் மீள்பெறுவனவு ரூபா 401,153 தொகை மீண்டும் வரிக்கு முன்னைய தேறிய இலாபத்திற்குச் | இந்த பிழையான பதிவுசெய்தல் தவறவிடப்பட்டுள்ளது. எனினும் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த காசு மீதிக்காக இதனால் தாக்கம் ஏற்படவில்லை. | இலங்கை கணக்கீட:டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அப்பெறுமதி தொழிற்படு மூலதனத்தின் மாற்றங்களுக்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் தொழிறற்படு மூலதன மாற்றங்களுக்கு செம்மையாக்கப்பட வேண்டிய செலுத்த வேண்டிய செலவுகளின் வித்தியாசமான ரூபா 247,296 தொகையும் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திறைசேரி உண்டியல்களின் முதலீடு மீது உழைத்த ரூபா 410,000,000 தொகையான வட்டி வருமானம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் செம்மையாக்கப்பட்டிருந்தும் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஆணைக்குழுவினால் மென்பொருள் மற்றும் நடமாடும் வாகனத்தின் கொம்பரஸரின் பாதிப்பினை திருத்தம் செய்யும் செலவு, நவீன தொழில் நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்திற்கான மாதாந்த வாடகை, பராமரிப்பு கட்டணம் உள்ளடங்கலாக ஆலோசனை சேவை செலவுகள் மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிக்கும் செலவுகளுக்காக முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்திய ரூபா 12,467,039 தொகையான செலவுகள் மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்ததனால் அத்தொகையால் மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | இந்த 02 கொடுப்பனவு வகைகளுக்காக ஆணைக்குழு அங்கீகாரம் 2023 மார்ச் 09 ஆந் திகதியும் ஏப்ரல் 03 ஆந் திகதியும் கிடைத்திருந்தும் இக்கொடுப்பனவு வவுச்சர்கள் நிதிப்பிரிவிற்கு 2023 மே 29 ஆந் திகதியும் 2023 யூலை 05 ஆந் திகதியும் கிடைத்திருந்ததுடன் கிடைத்த திகதிகளிலேயே நிதிப் பிரிவு கொடுப்பனவை மேற்கொண்டுள்ளது. | ஆண்டிற்கான செலவுகளை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களில் வணிக கடன்பட்டோர் மீதி ரூபா 372,764,954 ஆக இருந்ததுடன் | இணங்கிக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்கிலுள்ள மீதிகள் பட்டோலைகளிலுள்ள மீதிகளுடன் ஒப்பீடு செய்யப்பட |

| | |
|---|---|
| அக்கடன் பட்டோர்கள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 370,622,742 ஆகும். அதற்கிணங்க ரூபா 2,142,212 ஆக இருந்த போதிலும் அந்த வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வேண்டியதுடன் வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 20(2)(இ), 21(2)(ஆ) மற்றும் 22(2)(அ) பிரிவுகள் | ஒழுங்குவிதிகளுக்கு இணக்கமற்ற வகையில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலம் தொடர்பாக பணம் கிடைப்பதற்கு முன்னர் சேவைகள் வழங்கியதன் காரணமாக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 372,764,954 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் பணம் கிடைப்பதற்கு முன்பாக சேவைகள் வழங்கப்படவில்லை. சேவைகள் வழங்குவதற்கு முன்னர் வரி இன்வொயிஸ்கள் வழங்கியதனால் அறவிட வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து இது சரிசெய்யப்பட்டது. | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பணம் கிடைப்பதற்கு முன்னர் சேவைகள் வழங்கப்படாதிருத்தல் வேண்டும். பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1991 இன் 25 ஆம் இல் இலங்கை தொலைத் தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு மற்றும் ஆஸ்க் கேபல் விசன் தனியார் | வருடாந்த புரள்வின் பிரகாரம் கணிப்பீடு செய்த செஸ் பெறுமதியானது கணக்காண்டு முடிவடைந்து அடுத்துவரும் சனவரி 31 அல்லது அதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2024 மே 30 ஆந் திகதி | 2024 பெப்ரவரி 05, 2023 மார்ச் 04, 2023 மே 30 மற்றும் 2023 யூன் 07 ஆகிய திகதிகளில் கடிதங்களின் மூலம் உரிய வரியுடன் செஸ் செலுத்த வேண்டும் என | கணிப்பீடு செய்த செஸ் பெறுமதியானது கணக்காண்டு முடிவடைந்து அடுத்துவரும் சனவரி 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கம்பனிக்கு வழங்கிய சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவு | வரை ஒரு தனியார் கம்பனியிடமிருந்து 2023 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 3,812,242 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தெரியப்படுத்தியிருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கிறேன். | |
| (இ) | 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத் தொடர்பு வரி அதிகாரச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 03 ஆம் பிரிவு | டயலொக் தொகுதிக்குச் சொந்தமான 03 தனியார் கம்பனிகளிடமிருந்து 2023 மார்ச் மாதம் தொடர்பான தொலைத் தொடர்புகள் வரி முறையே ரூபா 35,773,073 ரூபா 30,000,000 மற்றும் ரூபா 11,934,504 ஆக மொத்தம் ரூபா 77,707,577 தொகை ஆணைக்குழுவினால் அறவிட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அப்பணம் டயலக் தொகுதியினால் அறவிடமுடியாக் கடனாக கடன்பட்டோர்களிலிருந்து பதிவழித்தலின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஆணைக் குழுவினால் அப்பணத்தை செலுத்த வேண்டியதாக டயலொக் தொகுதிக்கு மற்றும் திறைசேரிக்கு தெரியப்படுத்தியிருந்தும் அப்பணம் நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | டயலொக் தொகுதியின் அறவிடமுடியாக் கடன் அடிப்படையில் கடன்பட்டோர்களிடமிருந்து பதிவழிக்கப்பட்ட ரூபா 77,707,577 தொகை கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு வரியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்காக போட்டி பிரிவின் மூலம் திறைசேரிக்கு அனுப்பிய கடிதத்திற்கான விளக்கமளித்தல் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து முடிவுறுத்தும் வரை கிடைக்காததனால் பெறவேண்டிய தொலைத் தொடர்பு வரியாக காட்டப்பட்டுள்ளது. | 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத் தொடர்பு வரி அதிகாரச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் தொலைத் தொடர்பு வரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 45,803,540,546 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 31,697,157,371 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 14,106,383,175 அதிகரிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது .இந்த அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வருமானம் ரூபா 9,821,338,734 ஆல் அதிகரத்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டன. அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 10,156,878,457 ஆல் அல்லது 54 சதவீத்தினாலும் தொலைபேசி குறுந்தகவல் சேவை வரி ரூபா 56,061,385 ஆல் அல்லது 24 சதவீத்தால் அதிகரித்ததுடன் ஒழுங்குபடுத்துதல் செலவு ரூபா 260,359,079 ஆல் அல்லது 124 சதவீத்தால் அதிகரித்தல் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் மீதியினுள் ரூபா 2,174,406 தொகையான 544 மறைக்கடன் மீதிகளை 2023 திசெம்பர் 31 வரை தீர்த்துவைப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கடன் மீதியில் ரூபா 100 இற்கு குறைந்த கடன் மீதிகளின் எண்ணிக்கை 415 ஆகும். | இணங்கிக் கொள்கிறேன். | கடன் மீதியை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வணிக கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 372,764,954 தொகை அறவிடவேண்டிக் காணப்பட்டது. அது தொடர்பாக 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மொத்த கடன் மீதி 02 ஆண்டகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் கடன் மீதிகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வில் உறுதிப்படுத்தியதற்கு இணங்க அக்கடன் மீதியினுள் 1976 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு | 2023 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 372,764,954 மீதி 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாகும். அது காலப்பகுப்பாய்வின் போது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதியாக காட்டப்பட்டுள்ளது. அது 20 ஆண்டுகளக்கு மேல் அறவிட வேண்டி இருந்த மீதி எனத் தெரிவிக்கிறேன். | நிலுவையான வருமானங்களை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரும் ரூபா 15,103,410 கடன் மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. நிலுவையான வருமானங்களை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தாததன் காரணமாக இக்கடன்பட்டோர்களை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. மேலும் மொத்த கடன்பட்டோர் மீதியில் 46 சதவீத்திற்கு மேற்பட்ட அளவானவையான ரூபா 174,800,000 தொகை 1993 ஆம் ஆண்டிலிருந்து இலக்ட்ரோனிக் தனியார் கம்பனியிடமிருந்தும் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவையான ரூபா 145,254,449 தொகை 1976 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திடமிருந்தும் அறவிட வேண்டியிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கணக்கு மீதியினுள் ரூபா 1,947,254 மொத்த பெறுமதியான அட்டுறு பெறுமதிகள் தொடர்ச்சியாக செலுத்தப்படாது அட்டுறுவாக காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் தீர்த்துவைக்கப்படாத உழைக்கும் போதே செலுத்தும் ரூபா 56,537 தொகையும் ஆணைக்குழுவில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து மிகையாக அறவிட்ட ரூபா 12,657 இடர்கடன் மீதியும், ரூபா 1,878,060 தொகை ஆணைக்குழுவினால் சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையுமாகும். | செலுத்தாமைக்கான காரணத்தை அடையாளங்கண்டு கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் பிரதான கட்டிட தொடரினை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்த | இச்செயற்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 209,093,034 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் புதிய கட்டிடத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கை 2020 பெப்ரவரி 15 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2024 மே 30 ஆந் திகதி வரை நிர்மாண வேலை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. இச்செயற்திட்டத்திற்கு கால நீடிப்பு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்தினை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தத்தின் அளவீட்டுப் பத்திரம் மற்றும் மதிப்பிட்டினைத் தாயாரிக்கும் செயற்பாட்டிற்கான ஆலோசனைக் கட்டணமாக 2015 சனவரி 25 ஆந் திகதி மொறட்டுவை பல்கலைக்கழக்கத்திற்கு ரூபா 10,057,910 செலுத்தப்பட்டிருந்ததுடன் அச்செலவு நடைமுறை வேலைக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2024 மே 30 ஆந் திகதி வரை கட்டிடத்தினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | அவசியமானது என தீர்மானிக்கப்பட்டதனால் அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் 2023 மே 10 ஆந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்தல் இடம்பெற்றுள்ளது. தற்பொழுத செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடையும் கட்டத்தில் காணப்படுவதுடன் செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்காக ஒப்பந்தக்காரர் உரிய வேண்டுதலினைச் செய்துள்ளார். அந்த வேண்டுதல் செயற்திட்ட ஆலோசனை பிரிவான மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கதிரானை அலைவரிசை பரீட்சிப்பு நிலையத்தின் கட்டிடத்தினை நவீனமயப்படுத்துதல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்காக பெறுமதி சேர் வரி இல்லாது ரூபா 139,882,281 பெறுமதிக்கு 2019 சனவரி 31 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 102,662,861 ஆகும். ஒப்பந்தத்ததை பூர்த்திசெய்யும் | தற்பொழுது ஒப்பந்தக்காரர் வேலைத் தளத்தில் வேலையை ஆரம்பித்துள்ளதுடன் மிகுதியாக உள்ள வேலைகளுக்காக முறையான ஒரு மதிப்பீட்டினை செயற்திட்ட ஆலோசனை பிரிவான மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் தயாரித்து செயற்திட்டத்தின் | ஒப்பந்த உனடப்டிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிவுறுத்துவதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி 2019 நவம்பர் 11 ஆந் திகதியாக இருந்தும் 2024 மே 22 ஆந் திகதி வரை ஒப்பந்தம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்செயற்திட்டத்திற்கான செயற்திட்ட காலம் 2024 ஆகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒப்பந்த பிற்சேர்க்கை (Addendum) மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) | ஆணைக்குழு ஒப்பந்தக்காரருடன் மேற்கொண்ட ஹம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத்தொடர்பு ஊடக நிலையத்தை நிர்மாணிக்கும் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய ஒப்பந்தம் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஒப்பந்தத்தை முடிவுறுத்துகையில் ஒப்பந்தத்தில் 33 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்த ஒப்பந்தம் கணக்காய்வுத் திகதியான 2024 மே 30 ஆந் திகதி இடைநடுவில் நிறுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆக மாறியிருந்தது. அவ்வாறே 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 711,268,796 தொகை விளைவற்ற செலவாக இருந்ததுடன் அது நிதிநிலைமை கூற்றில் முடிவுறாத வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்கத்தினால் தீர்மானித்து ஆரும்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்திற்கு மேலதிகமாக அமுல்ப்படுத்த வேண்டியிருந்த ஏனைய அது சார்ந்த செயற்திட்டங்களை ஆரம்பிக்காமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் தற்பொழுது காணப்படுகின்ற முறைமையில் முதலீட்டாளர்களுக்கு இந்த வளவினை வழங்குவதற்காக விருப்பினைக் கோருதல் (EOI) இடம்பெற்றுள்ளது. | வளவினை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து செலவு செய்யப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |